## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்கள் அருளிய

# இந்து வேதம்

தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்



"ஒரு மதம் எந்த நாட்டிலே உருவாகிறதோ, அது அந்த நாட்டு மக்களுக்கு மட்டும்தான் பயன்படும் என்று இந்துவேதம் திட்டவட்டமாகக் கூறுகின்றது."

## தமிழர்களின் முன்னோர் வழிபாடு பிறமண்ணினரால் கெடுக்கப் பட்ட விதங்கள்

மாசி மாத வெளியீடு (Feb2015 - Mar2015)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,116

காணிக்கை ரூ.10/-

ஒரு மொழிக்குரிய கடவுள் இன்னொரு மொழிக்காரனுடைய தொடர்பு கொள்ள முடியாது.

# உள்ளுறை

**1. அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும்.**

அமாவாசை விரதம் ஏன் வழிபடப் பட வேண்டும் என்ற விளக்கமும், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற விளக்கங்களும் உள்ள கட்டுரை.

**2. உண்மையான இந்துமத உயர்ச்சிக்காக வடஆரிய வேதநெறிக்குக் கண்டிப்பு.**

1984இல் மார்ச்சு மாதம் குருதேவர் அறிக்கையில் காயந்திரி மந்தரம் விளக்கக் கட்டுரை வெளியிடப் பட்ட பின் தமிழ்நாட்டில் வாழும் பிறமண்ணினர்கள் துவக்கிய மறைமுக எதிர்ப்புக்கு அளித்த விளக்கங்கள்.

**3. அருளுலக இருளகற்றும் அறிவிக்கை.**

திருமூலரின் கருத்துக்களையும் திருவள்ளுவரின் கருத்துக்களையும் மெய்யான இந்துமதத்தின் கருத்துக்களாக ஏற்றுக் குழம்பக் கூடாது என்பதற்கான விளக்கங்கள்.

**4. சிவராத்திரி பற்றி இந்துவேதம் கூறும் செய்திகள்.**

சிவராத்திரி அன்று என்ன செய்ய வேண்டும் என்ற விளக்கமும், சிவராத்திரி எதற்காக ஏற்பட்டது என்ற விளக்கங்களும் உள்ள கட்டுரை.

---

# அமாவாசை விரதமும் சுடுகாட்டுப் பூசையும்

அமாவாசை என்பது அம் + ஆசை = அழகிய ஆசை

=> வாழ்வைப் பயனுள்ளதாக, வடிவமைப்புள்ளதாக, வாய்மையுள்ளதாக மாற்றிக் கொள்ளப் பயன்படும் நாள் இது. மாதத்திற்கு ஒருநாள்தான் வரும் என்பது உலக வழக்கு. ஆனால், சித்தர் நெறிப்படி மூன்றாம் பிறை நாள், இரண்டாம் பிறை நாள், அமாவாசை நாள், அமாவாசைக்கு முந்திய நாள், அமாவாசைக்கு முந்திய நாளுக்கு முந்திய நாள் என்று ஐந்து நாட்களும் அமாவாசை நாட்களாகவே கருதப் படுகின்றன.

அதாவது, மனிதன் அல்லது மனித வாழ்வு அல்லது மனித இயக்கம் என்பது மனித ஆவி + ஆன்மா + ஆருயிர் என்ற மூன்று வகைப்பட்ட தனித்த, வடிவமைப்பும், வாழ்வியலும் உடைய மூன்று வகைச் சத்திகளின் கூட்டு இயக்கமேயாகும். இந்தக் கூட்டு இயக்கம் மேற்படி அமாவாசை நாட்களான ஐந்து நாட்களில்தான் சிறப்பாகச் செயல்படும். அதிலும் நிறைந்த அமாவாசைப் பஞ்சாங்கப் படி அந்த (24) இருபத்திநான்கு மணி நேரத்தில்தான் இந்த மூன்றின் கூட்டும் நன்றாக சிறப்பாக முழுமையாக ஒன்று சேர்ந்தும் இணைந்தும் பிணைந்தும் நிகழும்! நிகழும்! நிகழும்!

எனவேதான் அமாவாசை உள்ள நேரத்தில் கட்டாயமாக விரதம் இருக்க வேண்டும் என்ற நியதி அல்லது சட்டம் அல்லது விதி உண்டாக்கப் பட்டது. ஏனென்றால், இந்த விரதம்தான் முற்பிறவிகளையும், மறுபிறவிகளையும், இப்பிறவியையும் இணைக்கக் கூடிய ஒன்றாகும்.

இதேபோல், செத்து மாண்டு மடிந்து போன முன்னோர்களின் **ஆருயிர்**@, **ஆவி**#; **ஆன்மா**$ எனும் மூன்றும் மேற்படி அமாவாசை நாட்களில்தான் ஒன்று கூடி உரியவர்களின் வாரிசுகளின் வாழிடங்களுக்கு வருவார்கள். எனவேதான், அவர்களை மகிழ்விப்பதற்காக, நிறைவு செய்வதற்காக, அமைதிப் படுத்துவதற்காக, நல்ல சுமுகமான உறவு நிலையில் வைத்துக் கொள்வதற்காக மேற்படி அமாவாசை நாட்களில் விரதமிருக்க வேண்டுமென்ற நியதியும் விதியும் உருவாக்கப் பட்டன.

**விரதம்** என்றால் பலர் பல விதமான பொருளைச் சொல்லுகிறார்கள். இந்தச் சொல்லையே சமசுக்கிருத மொழிச் சொல் என்று சொல்லுகிறார்கள். பிருமணர்களின் *பொய்யான ஹிந்து மதத்தில்* விரதங்களில் எண்ணற்ற வகைகளும், பல்வேறு வகையான முறைகளும், கணக்கற்ற நெறிகளும், பூசாவிதிகளும், வேதங்களும் வழங்கப் பட்டிருக்கின்றன. இவையனைத்தும் **மெய்யான இந்துமத**த்துக்குரிய மூலவர்களான, காவலர்களான தமிழர்களை முட்டாள்களாக்கி அடிமைகளாக்கிச் சுரண்டுவதற்கேயாகும். இதற்காகத்தான், பிறமண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்கள் **விரதம்** என்ற சொல்லையே சமசுக்கிருதச் சொல்லாக உரிமை பாராட்டிக் கொண்டிட்டார்கள்.

---

@**ஆருயிர்** = செத்தவுடன் பிரிவது உயிர்;

#**ஆவி** = செத்துச் சில ஆண்டுகள் கழித்து ஆவி தனியாகப் பிரியும். செத்தவரைப் புதைத்த அல்லது எரித்த இடத்திலிருந்து அது பிரிந்த பிறகுதான் செத்தவரை மாண்டு போனார் என்று சொல்லுவார்கள்;

$**ஆன்மா** = செத்தவரைப் புதைத்த அல்லது எரித்த இடத்திலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு முதலில் ஆவி பிரிந்து போகும், அதன்பிறகு ஆன்மா பிரிந்து போகும், இப்படி ஆன்மாவும் பிரிந்து போனவர்களைத்தான் செத்து, மாண்டு, மடிந்து போனார் என்று சொல்லுவார்கள்.

எனவேதான், இந்த விரதம் என்ற சொல்லையே முழுமையாக விளக்கியுரைத்து இது ஓர் உயர்தனிச் செந்தமிழ்ச் சொல் என்ற பேருண்மையை நிலைநாட்டிடல் வேண்டும். அதன்பிறகே, அமாவாசை விரதம் பற்றிய கருத்துக்களை விளக்க வேண்டும் என்று முடிவெடுக்கப் படுகின்றது.

**வீரம் + தவம் = வீரதவம்** = இப்படி விரதம் என்ற சொல் '<u>வீரமாகச் செய்யும் தவம்</u>' என்ற பொருளை விளக்குகின்ற ஒரு பொருளாழமிக்க உயர்தனிச் செந்தமிழ்ச் சொல்லாகும். இனிமேல் முறையாகவும் நிதானமாகவும் *பொய்யான ஹிந்துமதம்* கூறுகின்ற விரத வகைகளையும், வழிமுறைகளையும் சிந்திப்போமேயானால் விரதம் என்ற சொல்லின் பெயரால் எவ்வளவு பெரிய மோசடிகளும், பித்தலாட்டங்களும், ஏமாற்றுக்களும், அயோக்கியத் தனங்களும், காட்டுமிராண்டித் தனங்களும், ஆபாசங்களும், திசைதிருப்பல்களும், பயனற்றப் பழக்க வழக்கங்களும், பொருளற்ற பழக்க வழக்கங்களும், கருத்தற்ற கற்பனைகளும் பிறமண்ணினரான பிருமணர்களால் புகுத்தப்பட்டு விட்டன என்ற பேருண்மை விளங்கிடும்! விளங்கிடும்! விளங்கிடும்!

அதாவது, "இந்த விரதம் என்ற சொல்லைக் கொண்டே *பொய்யான ஹிந்து மதத்தின்* அவலக் கேவலங்களையும், மோச நாசங்களையும், சூழ்ச்சிகளையும், சுரண்டல்களையும், சதிகளையும், பயனற்ற நிலைகளையும், .... மிகத் தெளிவாக விண்டு கண்டிடலாம், விளக்கி யுரைத்திடலாம். அதனால், **மெய்யான இந்துமத**த்தின் மறுமலர்ச்சியையும், வளவளர்ச்சியையும், வலிமைச் செழுச்சியையும் உருவாக்கிடலாம், உருவாக்கிடலாம், உருவாக்கிடலாம்." என்று குருபாரம்பரியம் கூறுவதை இங்கு குறிப்பிட விரும்புகிறோம் யாம்.

செத்தவர்களைப் புதைப்பதும், எரிப்பதும், அப்படியே இடுகாட்டில் பிற உயிரினங்களுக்கு உணவாக விட்டு விடுவதும் ..... தொன்று தொட்டு மரபாக உள்ளன. இவற்றில் எந்த முறை செத்தவருக்காகக்

கையாளப் பட்டாலும்; அது எந்த இடத்தில் கையாளப்பட்டதோ அல்லது நிகழ்த்தப் பட்டதோ, அந்த இடத்தில்தான் செத்தவருடைய ஆருயிர், ஆவி, ஆன்மா மூன்றும் அந்தக் குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சென்றிடும். இதைத் தவிரச் செத்தவருடைய ஆருயிரோ, ஆவியோ, ஆன்மாவோ அவர் செத்த வீட்டிற்கோ, செத்த இடத்திற்கோ அடிக்கடி வந்து செல்லும் என்ற கருத்தைச் சித்தர் நெறி ஏற்கவில்லை.

ஏனெனில், ஈமக் கிரியைகள் பிணத்தைப் புதைக்கும் அன்று அல்லது எரிக்கும் அன்று நிகழ்த்தப் படுவதோடு மறுநாள் பால் தெளியல், அடுத்து (18) பதினெட்டு நாட்களுக்குள் கல்லெடுப்பு, கருமாதி, மாத தவவாசம் [= தவம் + வாசம் = தவசம் = திவசம்*], ஆண்டுத் தவவாசம் [= ஆண்டுத் தவசம் = ஆண்டுத் திவசம்] என்பன செய்து முடித்தவுடன் செத்துப் போனவர்களுடைய ஆவி ஆன்மா ஆருயிர் மூன்றுக்கும் தங்களுடைய குடும்பத்தினர்கள் இடையேயும், உறவினர்களுக்கு இடையேயும் உள்ள அனைத்து விதமான சொந்த பந்தங்களும் முற்றுப் பெற்று விடுகின்றன.

அதாவது, முதலாண்டு தவச நிறைவுக்குப் பிறகு செத்துப் போனவர்களுடைய ஆவி ஆன்மா ஆருயிர் என்பனவற்றில் எதுவுமே தமது சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப தனது குடும்பத்தார்களின் வீட்டிற்கோ, சொந்தக்காரர்களின் வீட்டிற்கோ சென்றிட இயலாது, இயலாது, இயலாது, இயலவே இயலாது. அதுமட்டுமல்ல, இதுதான் அருளுலகத்தின் சட்டம்.

இந்தச் சட்டத்தை மீறி ஆண்டுத் தவச நிறைவுக்குப் பிறகு எந்த செத்தவருடைய ஆவியோ, ஆன்மாவோ, ஆருயிரோ தமது சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப தங்களின் குடும்பத்தார்களின்

---

* இந்தத் திவசம் என்ற சொல்லைச் சமசுக்கிருதச் சொல் என்று குறிக்கின்றார்கள் பிருமணர்கள்.

வீட்டிற்கோ அல்லது சொந்தக் காரர்களின் வீட்டிற்கோ செல்லக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது என்பதுதான் அருளுலகின் சட்டம், கண்டிப்பான விதி, உண்மையான நீதி.

ஆனால், செத்துப் போனவர்களுடைய குடும்பத்தார்களோ அல்லது சொந்தக் காரர்களோ அமாவாசை நாட்களில் மட்டும் (ஏற்கனவே குறிப்பிடப் பட்ட ஐந்து நாட்களில் மட்டும்) வீரதவமிருந்து (விரதம்) வேண்டி விரும்பி அழைக்கும் போது செத்தவர்களின் ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றுமே கூட அந்த வீட்டிற்கு வருகை புரிந்திடலாம் என்பதுதான் அருளுலகச் சட்டம்.

அதாவது, ஆருயிர் மறுபிறப்பு எடுத்திருந்து ஆவியும் ஆன்மாவும் மட்டுமே மீதமிருந்தாலோ அல்லது ஆவி மாண்டு போயிருந்து ஆன்மா மட்டும் இருந்தாலோ அல்லது மூன்றுமே மறுபிறப்பில் ஒருங்கிணைந்து இருந்தாலோ இருப்பவை மட்டுமே அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கேற்ப வரும்.

**<u>குறிப்பு</u>:-**

**<u>ஆவி</u>** மந்திறவாதிகளால் கட்டப்பட்டோ அல்லது குறிப்பிட்ட வழிபாட்டு நிலையங்களில் ஐக்கியமாகியோ இருந்திட்டால் அதைப் பற்றிய அறிகுறிகள் விரதப் பூசையில் தெரியும்.

**<u>ஆன்மா</u>** முத்தியடைந்து அண்டபேரண்டங்கள் கடந்து ஒளியணுக்களின் பெருங்கடலில் கலந்திருக்குமேயானால் கூட விரதத்தார்களின் அழைப்புக்கு வராது. அதையும், அதைப் பற்றிய அறிகுறியும் அமாவாசை விரதத்தாருக்குத் தெரிய வரும்.

ஒருவேளை ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் ஒருங்கிணைந்து சமாது நிலையை எய்தியிருக்குமேயானாலும் சரி, அல்லது பிறவாமையைப் பெற்றிருக்கும் என்றாலும் சரி, அல்லது இறவாமையைப் பெற்றிருக்கும் என்றாலும் சரி, அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கேற்ப இவை வர முடியாது. ஆனால்,

இவற்றின் சித்தி நிலைகள் பற்றிய அறிகுறிகள் அமாவாசை விரதத்தாருக்கு தெரிய வரும்.

அமாவாசை விரதத்தாரின் அழைப்புக்கு இணங்கி அவர்களுடைய வீட்டிற்கு வருகை புரியாத ஆருயிர் ஆவி ஆன்மா என்ற மூன்றும் தங்களுடைய உடலை அல்லது பிணத்தை எங்கு எரித்தார்களோ அல்லது புதைத்தார்களோ அந்த இடத்திற்கு சித்தர் நெறிக்குரிய ஐந்து அமாவாசை நாட்களில் கட்டாயமாக வருகை புரிந்திடுவார்கள், வருகை புரிந்திடுவார்கள், வருகை புரிந்திடுவார்கள்.

இந்தப் பேருண்மையின் அடிப்படையில்தான் அமாவாசைக்கு உரிய ஐந்து (5) நாட்களில் சித்தர் நெறிப்படி தங்கள் தங்களின் வசதி வாய்ப்புக்களுக்கேற்ப ஏதாவது ஒரு அமாவாசை நாளில் வழக்கமாகத் தங்களின் குடும்பத்தவர்களே அல்லது குலத்தவர்களே அல்லது இனத்தவர்களே* எரிக்கின்ற சுடுகாடுகளிலும் புதைக்கின்ற புதைகாடுகளிலும்# சென்று பூசை செய்ய வேண்டுமென்ற சட்டம் **மெய்யான இந்துமத**ப்படி பதினெண் சித்தர்களால் உருவாக்கப் பட்டது.

அதாவது **மெய்யான இந்துமத**ப் படி எந்தக் குடும்பத்தவர்களாக இருந்தாலும் அமாவாசை விரதத்தன்று அந்தக் குடும்பத்தார்களின் சுடுகாட்டிற்கும், புதைகாட்டிற்கும் சென்று வீட்டிலிருந்து விரதத்திற்கென்று சமைக்கப் பட்ட உணவை எடுத்துச் சென்று படைத்து, ஊதுபத்தி ஏற்றி, அகல்விளக்கேற்றி, முறைப்படி தேங்காய்

---

* பிருமணர்களின் வருகைக்குப் பிறகு சாதிகளின் அடிப்படையில் சுடுகாடுகளையும் புதைகாடுகளையும் உருவாக்குவதற்கு இந்தத் தத்துவம் எந்த அளவில் பயன்பட்டது என்பது தெரியவில்லை.

\# ஒரே குடும்பத்தில் பிறந்தவர்களின் பிணங்கள் சில புதைக்கப் படுவதும், சில எரிக்கப் படுவதும் மரபாக இருப்பதை இன்றைக்கும் காண முடிகின்றது.

பழம், வெற்றிலை பாக்கு, பூ வைத்துப் பூசை செய்து வர வேண்டும். இதன் மூலமே, அவர்கள் தங்களின் முன்னோர்களுக்கு நன்றிக் கடன் செய்தவர்களாவார்கள்.

எனவேதான், பதினெண்சித்தர்கள் கி.மு. 43,71,101ஆம் ஆண்டில் இம்மண்ணுலகிற்கு இளமுறியாக் கண்டம் எனப்படும் குமரிக் கண்டத்தில் வழங்கிய **மெய்யான இந்துமத**த்தில் சுடுகாடு, புதைகாடு, இடுகாடு, நன்காடு, விடுகாடு, படுகாடு, நடுக்காடு .... என்று பதினெட்டு (18) வகையான காடுகள் அமாவாசை விரத நாட்களில் வழிபாட்டுக்குரிய நிலையங்களாக அமைக்கப் பட்டன.

இந்தப் பதினெண் காட்டுப் பூசைகள்தான் முற்பிறவிகள், மறுபிறவிகள், இப்பிறவியின் நாள், கோள், மீன், ஊழ், விதி, ... நிலைகள்.... பற்றிய நுட்ப திட்ப ஒட்பப் பேருண்மைகளை யெல்லாம் அநுபவப் பூர்வமாக விளக்குபவையாக இருக்கின்றன! இருக்கின்றன! இருக்கின்றன!

எனவேதான், **மெய்யான இந்துமத**த்தின் முழுமுதற் கடவுளான சிவபெருமான் சுடுகாட்டிலே திருநடனம் ஆடுவதாகக் கூறுகின்றது. சுடலையாண்டி, சுடலையாண்டிச்சி, சுடலை ஈசுவரன், ஈசுவரி, சுடலைக் காரன், சுடலைக் காரி, சுடலை மோகினி, இடாகினி, இயக்கி, பேச்சி, சண்டி, சாமுண்டி, கொற்றவை, காடுகிழாள், பத்திறகாளி, காளி, மாரி, அங்காள பரமேசுவரி, பகவதி..... போன்ற அனைத்து வகையான தேவதைகளும், தேவியர்களும் முறைப்படுத்தப் பட்டுள்ளார்கள், வகைப்படுத்தப் பட்டுள்ளார்கள்.

அதாவது, மேற்படி சுடுகாட்டுக் கடவுள்களும், தேவியர்களும், தேவதைகளும், தேவர்களும்..... **மெய்யான இந்துமத**த்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும், ஆட்சிச் சத்திகளாகவும் படைக்கப் பட்டுள்ளார்கள். அதாவது, அமாவாசை தோறும் அந்தந்த ஊர் மக்கள் அந்தந்த ஊரிலுள்ள மேற்படி பதினெட்டு (18) வகைக் காடுகளிலும் தங்கள் தங்களுக்குரிய காடுகளுக்குச் சென்று

வழிபாடுகளைச் செய்து அருட்பயன்களை அடைய வேண்டும் என்பதுதான் **மெய்யான இந்துமத**த்தின் தத்துவமும் சித்தாந்தமும்.

இம்மாபெரும் தத்துவத்தையும் சித்தாந்தத்தையும் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் கெடுத்தும் தடுத்தும் அருட்பயன் பெறலைச் சிதைத்துச் சீரழித்து விட்டார்கள். எனவேதான், **மெய்யான இந்துமதம்** மிக எளிதாக மறக்கப் பட்டும், சிதைக்கப் பட்டும் இருக்கும் நிலையை மாற்றி, *பொய்யான ஹிந்துமதத்தை* வென்று, **மெய்யான இந்துமத**த்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், ஆட்சிச் செழுச்சியும் அடையுமாறு செய்ய வேண்டும் என்றால் **மெய்யான இந்துமத**த்தின் அடிப்படையான அமாவாசை விரத நாளில் செய்யப் படும் பதினெட்டு வகைக் காடுகளில் பூசை அதாவது குறிப்பாக சுடுகாட்டிலும் செய்யப் படுகின்ற பூசை அனைத்து மக்களாலும் புரிந்து விரும்பி நம்பியேற்றுச் செயலாக்கப் பட வேண்டிய ஒன்றாக ஆக்கப் படவேண்டும்.

அதாவது, அமாவாசை விரதப் பூசைகள் எல்லா ஊர்களிலும் உள்ள சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் சிறப்பாக செய்யப்படக் கூடிய நற்காலமும், பொற்காலமும் உருவாக்கப் படுவதன் மூலம்தான் **மெய்யான இந்துமத**த்தின் மறுமலர்ச்சிப் பணி வெற்றி பெறும்.

சுடுகாட்டையும், புதைகாட்டையும் பார்த்து மக்கள் அச்சமும், கூச்சமும், ஆச்சரியமும், மாச்சரியமும் அடைய நேரிட்டு விட்ட காரணத்தினால்தான் பதினெண்சித்தர்கள் உருவாக்கிய **மெய்யான இந்துமத**ப்படி அருளை அநுபவப் பொருளாக அடையக் கூடிய சுடுகாட்டுப் பூசைகளும், புதைகாட்டுப் பூசைகளும் தடைப் பட்டு விட்டன! தடைப் பட்டு விட்டன! தடைப் பட்டு விட்டன!

ஆனால், புதைகாட்டுப் பூசையை நிலை நிறுத்திய புத்த மதமும், கிறித்தவ மதமும், இசுலாமிய மதமும் உலகம் தழுவிய கொழுமையான எழுச்சி மிக்க செழிச்சி யடைந்து வளர்ச்சி யடைந்துள்ளன. இதனைப் புரிந்தாவது **மெய்யான இந்துமத**த்தின் மறுமலர்ச்சிப்

பணி என்பது அல்லது நமது நாட்டு மக்கள் *பொய்யான ஹிந்து மதத்*திலிருந்து விடுபட்டு அருளை அனுபவப் பொருளாக அடைவதற்குரிய வழி எல்லா ஊர்களிலும், அமாவாசை விரத நாட்களில் சுடுகாடுகளிலும், புதைகாடுகளிலும் பூசை நடக்குமாறு செய்வதுதான்.

**குறிப்பு**:- எனவே, உடனடியாக மக்களிடையில் சுடுகாட்டின் மேலும், புதைகாட்டின் மேலும் உள்ள அச்ச கூச்ச ஆச்சரிய மாச்சரிய உணர்வுகளைத் தடுக்கவும் அகற்றவும் முற்பட வேண்டும்! முற்பட வேண்டும்! முற்பட வேண்டும்!

இதற்காக வாரத்தின் ஏழு நாட்களிலும், காலையிலோ அல்லது உருமவேளையிலோ, அல்லது மாலையிலோ அல்லது முன் இரவிலோ அல்லது நள்ளிரவிலோ; எல்லா ஊர்களிலுமுள்ள சுடுகாடுகளிலும் புதைகாடுகளிலும் அவரவர் வசதிக்கேற்ப பதினெண்சித்தர் நெறிப்படி படையலிட்டுப் பூசை செய்து அருளை அனுபவப் பொருளாகப் பெறுகின்ற நிகழ்ச்சிகள் விரிந்தும் விரைந்தும் நிகழுமாறு செய்ய வேண்டும்.

அமாவாசை விரதப் பூசையில் மரக்கறி உணவு முறை (vegetarianism)தான் பின்பற்றப் பட வேண்டும் என்ற ஒரு தவறான கருத்து பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியரால் புகுத்தப் பட்டு விட்டது. இக்கருத்து முறையற்றது, தவறானது, பயனற்றது, தற்கொலைக்குச் சமமானது, **மெய்யான இந்துமத**த்தைச் செயலிழக்கச் செய்தது..... என்ற பேருண்மைகளை நம்மவர்கள் நன்கு தெரிந்து ஆராய்ந்து அறிந்து புரிந்து தெளிந்து உணர்ந்து நம்பி விரும்பி ஏற்றுச் செயலாக்கும் நல்ல சூழ்நிலையை நாடு தழுவி உருவாக்கினால்தான் *பொய்யான ஹிந்துமத*த்தின் ஆட்சி நிலைகள் ஒழிந்து **மெய்யான இந்துமத**த்தின் ஆட்சி மீட்சி நிலைகள் விழிச்சியும், எழிச்சியும் பெறும்! பெறும்! பெறும்!

அதாவது, **பதினெண் சித்தர்களின் பூசாவிதிப்படி குருதிப் பலியும், அவிர்ப்பலியும் கையாளப் பட்டிட்டால்தான் அருளை அநுபவப் பொருளாக அடைய முடியும்! அடைய முடியும்! அடைய முடியும்!** என்பதே பேருண்மையாகும். இந்தப் பேருண்மைதான் **மெய்யான இந்துமத**த்துக்கும் *பொய்யான ஹிந்துமதத்திற்கும்* உள்ள வேற்றுமைகளையும், வேறுபாடுகளையும், முரண்பாடுகளையும் மிகத் தெளிவாக அநுபவப் பூர்வமாக உணர்த்துகின்றது.

எனவேதான், **'இறைமையும் இறைச்சியும்'** என்ற தலைப்பில் பல கட்டுரைகள் எழுதப் பட்டுள்ளன. எனவே, அமாவாசை விரதத்தன்று வீட்டிலோ, அல்லது சுடுகாட்டிலோ, அல்லது புதைகாட்டிலோ செய்யப் படுகின்ற பூசைகளில் குருதிப் பலியும், இறைச்சி யுணவும் கட்டாயம் இருக்க வேண்டும்.

அதாவது அமாவாசை விரதமென்றால் கட்டாயமாக, அவசியமாக, முதன்மையாக எல்லோரும் இறைச்சியுணவு உண்ண வேண்டும்! உண்ண வேண்டும்! உண்ண வேண்டும்! அப்போதுதான் அமாவாசை விரதத்தின் பயனை அடையமுடியும்! அடையமுடியும்! அடைய முடியும்! இப்பேருண்மையினை யாரும் அருவெறுக்கத் தக்கதாக நினைக்கத் தேவையில்லை! ஏனெனில், இப்பேருண்மைதான் அருளை அநுபவப் பொருளாக வழங்கக் கூடிய **மெய்யான இந்துமதத்தில்** உயிர்நாடியானது. இதனை அமாவாசை விரதம் செய்பவர்கள் அல்லது இருப்பவர்கள் அநுபவப் பூர்வமாக உணரலாம்! உணரலாம்! உணரலாம்!

**குறிப்பு:-**

இந்தக் கட்டுரையைக் கண்டதிலிருந்தாவது அல்லது கேட்டதிலிருந்தாவது அமாவாசை விரதம் இருப்பவர்கள் தங்களது பூசைகளில் குருதிப் பலியையும், இறைச்சி யுணவுப் படையலையும் கையாண்டு இறைச்சி யுணவு உண்ண வேண்டும். அப்படிச்

செய்வதின் மூலம் இவர்கள் இதுவரை பெற்றிடாத பல அரிய பெரிய சீரிய அருளுலக அநுபவங்களைப் பெற்றிடுவார்கள்.

அதாவது இனிமேலாவது அருளை அநுபவப் பொருளாகப் பெற விரும்புகிறவர்கள் அன்றாடமோ அல்லது அடிக்கடியோ அல்லது அமாவாசை விரத நாட்களிலாவது தங்கள் தங்களின் குலத்தார்களுக்கும், இனத்தார்களுக்கும், குடும்பத்தார்களுக்கும் பாரம்பரியமாக உள்ள புதைகாடுகளிலும், சுடுகாடுகளிலும், இடுகாடுகளிலும்..... பதினெண்சித்தர்களின் முறைப்படி, அதாவது **மெய்யான இந்துமத** நெறிப்படி நிறைவான பூசைகளைச் செய்ய வேண்டும். இப்பூசைகளால் இவர்கள் விரிந்தும் விரைந்தும் பயனுள்ள கொழுமையான வளர்ச்சிகளைப் பத்தி நிலைகளிலும், சத்தி நிலைகளிலும், சித்தி நிலைகளிலும், முத்தி நிலைகளிலும் அடையலாம், அடையலாம், அடையலாம்.

இ.ம.இ.யின் வளர்ச்சிக்காக கருவூரர் வழிவந்த கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளை அவர்கள் எழுதிய எண்ணற்ற கட்டுரைகளில் இதுவும் ஒன்று. இந்தக் கட்டுரையை **மெய்யான இந்துமத** மறுமலர்ச்சிக்குப் பேருதவி புரியக் கூடிய பேரிலக்கியமாகக் கருதி வெளியிடுகிறோம்.

---

**/உண்மை நகல்/**

**<u>மூலம்:</u>** ‘குருதேவர்’ அறிக்கைகளில் அச்சிட்ட கட்டுரைப் பகுதிகள்; குருதேவர் அறிக்கை எண் 27, 28, 29, 30 என நான்கு அறிக்கைகளில் வெளியானவை.

1984 ஆகசுட்டு

# உண்மையான இந்துமத உயர்ச்சிக்காக வடஆரிய வேதநெறிக்கு கண்டிப்பு

தொடர்ந்து பல முன்னணிச் செய்தியேடுகள் காயந்திரி மந்தரத்துக்கு பல தவறுன விளக்கங்களே தந்து வருகின்றன. எனவே மீண்டும் நாம் தெளிவான விளக்கம் தருகிறேம்.

***தமிழின மறுமலர்ச்சியே இந்துமத விழிச்சியாக! எழுச்சியாக! செழுச்சியாக! உயர்ச்சியாக! அமையும்.***

***இந்துமத மறுமலர்ச்சியே தமிழின விழிச்சியாக! எழுச்சியாக! செழுச்சியாக! உயர்ச்சியாக! அமையும்.***

இப்பேருண்மையின் அடிப்படையிலே தொடர்ந்து வடஆரியரின் வேத நெறியால் இந்து மதம் நலிந்தும், மெலிந்தும், சிதைந்தும், பயன் குறைந்தும், செல்வாக்கிழந்தும் அடங்கியொடுங்கி அடிமைப்பட்டு கிடப்பதைத் தடுத்து நிறுத்தும் முயற்சியாக வடஆரிய வேதநெறியின் தவறுகளேயும், மடமைகளேயும், மாயங்களேயும், பொய்களேயும், பயனற்ற பழக்க வழக்கங்களேயும், மூடநம்பிக்கை மிகுந்த சாத்திர சம்பிறதாயங்களேயும், சுரண்டல் போக்குடைய சடங்குகளேயும், ஏமாற்று நோக்குடைய வழிகாட்டல்களேயும்..... நேரடியாகக் கண்டித்து விளக்கம் வழங்கிடும் நற்பணி துவக்கப் பட்டுள்ளது. தனி அறிக்கைகளும், நூல்களும் வடஆரிய வேதநெறியினரின் தவறுகளே திருத்தாமையால் இந்தச் சிறப்பிதழ் வெளிவருகிறது.

1. வடஆரிய வேதநெறி *துறவறத்தைச்* சிறப்பாகக் கூறுகிறது. ஆனால், பதினெண்சித்தர்கள் **இல்லறம்தான்** அனைத்து பத்தி, சத்தி, சித்தி, முத்தி நிலைகளுக்கும் உரியது என்று மிகத் தெளிவாக விளக்கியுரைக்கிறார்கள்.

**குறிப்பு**:- "துறவியானவன் தனக்கு மட்டுமே நன்மை செய்து கொள்பவன் என்பதால் இவன் கையால் அருளூறு பூசனைப் பொருட்கள் (திருநீறு, குங்குமம், பூ, படையல் உணவுகள் ....) முதலியவை பெறவே கூடாது. இல்லறம் ஏற்காது இளமையிலேயே துறவியாகிறவர்களைப் பார்ப்பதும் பெரும் பாவமாகும். இவர்களை வழிபாட்டு நிலையங்களிலோ, வழிபாடுகளிலோ ஒதுக்கியும், விலக்கியும், கடைநிலையில் வைத்திருந்தால்தான் அருள் ஊற்றுக்கள் கெட்டுப் போகா! அருட்பயன்கள் குன்றிட மாட்டா! ...."

- என்பது தான் அனாதி காலத்தில் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இந்துமதத் தத்துவமாக வழங்கியவை.

இந்துமதம் நடைமுறைக்கு வந்து 38,93,084 ஆண்டுகள் ஆகின்றன.

(கிரேதாஉகம்: 17,28,000 + திரேதாஉகம்: 12,96,000 + துவாபரயுகம்: 8,64,000 + கலியுகம் 5,084)

'வடஆரியர்கள் இந்தியாவுக்குள் வந்தது, கலியுகம் பிறந்து ஆயிரமாண்டுகள் கழித்தே; சித்தர்கள் சமசுக்கிருத மொழியை (சம - தமிழுக்குச் சமமாக; கிருதம் - செய்யப்பட்டது => சமசுக் கிருதம்) உருவாக்கியது கலியுகம் பிறந்து மூவாயிரம் ஆண்டுகள் கழித்தே .....' என்று சித்தர்களின் நூல்கள் வடஆரியர் பற்றியும், அவர்களது சமசுக்கிருத மொழி பற்றியும் மிகமிகத் தெளிவாகக் கூறுகின்ற போதும் கூடத் <u>தமிழர்கள் வடஆரியர்களை இந்துமதத் தலைவர்களாகவும், சமசுக்கிருத மொழியை இந்துமதப் பூசை மொழியாகவும் ஏற்றுக் கெட்டலைகின்றனரே</u>! இவர்களைத் திருத்திடப் பதினெண்சித்தர்கள் படைத்துச் சென்றுள்ள இந்துமதக் கலைகளையும் அறிவியல்களையும் கற்றுத் தந்து அருளை அநுபவப் பொருளாக

ஆக்கிடல் வேண்டும். இதற்காகவே “இந்து மறுமலர்ச்சி இயக்கம்”, “அருட்பணி விரிவாக்கத் திட்டம்”, “உலக அருளாளர் திருச்சபை”, “அருளுலக ஆர்வலர் கழகம்” ...... முதலிய பல அமைப்புக்கள் எம்மால் தோற்றுவிக்கப் படுகின்றன.

2. காயந்திரி மந்தரம் என்பது பதினெண்சித்தர்கள், தனிமனிதர்கள் பத்தி நிலே, சத்தி நிலே, சித்தி நிலே, முத்தி நிலே என்கின்ற நான்கு வகைப்பட்ட நிலேகளிலும் முறையான வளர்ச்சிகளேயும், முழுமையான வளர்ச்சிகளேயும் பெற்றிடவே உருவாக்கிய அருளூறுப் பூசாமொழி வாசகம்.

இக்காயந்திரி மந்தரம் சித்தர்களில் மண்ணே, பொன்னே, பெண்ணே மறுத்து வாழும் ஞானசித்தர் எனப்படும் _தனித்தத் தத்துவப் பித்தர்களும்_ ஓதிப் பயனடையும்படி உருவாக்கப்பட்டது.

**குறிப்பு**:- பதினெண்சித்தர்கள் மரபுப்படி மண், பெண், பொன் மூன்றையும் வெறுப்பவர்கள் “இளமையிலேயே இல்லறம் ஏற்காமல் துறவறம் ஏற்பவர்களேப் போல” நேரடியாக எந்த பூசைகளேயும் செய்ய முடியாது, செய்யக்கூடாது என்பது விதியாகும். அதாவது இவர்கள் பூசாறி, அருளாளி, மருளாளி, குருதேவர், குருக்கள், குருமார், பண்டாரம், ஓதுவார், ..... இவர்களில் யாரேனும் ஒருவரை நாடித்தான் தமக்குரிய பூசைகளேச் செய்து வர வேண்டும். இவர்கள் அருளுலகில் யாரையும் வாரிசுகளாக உருவாக்க முடியாது. புதிய வழிபாட்டு நிலேயங்களே உருவாக்கவும் முடியாது. எனவேதான் இப்படிப்பட்ட ஞான சித்தர்களும், துறவிகளும் கூட அருட்சத்தியடைய வேண்டுமென்பதற்காகவே பதினெண்சித்தர்களால் காயந்திரி மந்தரம் படைக்கப் பட்டது.

3. மண், பெண், பொன் இவற்றை வெறுப்பவர்களும், துறப்பவர்களும் அதாவது ஞானசித்தர்களும், துறவிகளும் இறைச்சியுணவை (மாமிசம், புலால்) மறுப்பவர்களாகவே இருந்திடுகின்ருர்கள். இவர்கள் பதினெண்சித்தர்களின் முறைப்படி

மீன், புரு, ஆடு, கோழி ... முதலியவைகளைப் பலி கொடுத்துப் பூசை செய்ய முன் வருவதில்லை, விரும்புவதில்லை. ஆனால் அருளுலக நாட்டமும் ஆர்வமும் உடையவர்களாக இருப்பதால் இவர்களும் அருளை அநுபவப் பொருளாக அடைந்து சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் சிறிதளவாவது பெற வேண்டும் என்ற கழிவிரக்கத்தால்தான் பதினெண்சித்தர்கள் இந்த காயந்திரி மந்தரம் என்ற ஒன்றை அருட்கொடையாக வழங்கி இதனை ஆறுகாலம் ஓதுபவர்கள் "மனித வாழ்வுக்குத் தேவையான சத்திகளைப் போதுமான அளவு" பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்தார்கள்.

**குறிப்பு**:- காயந்திரி மந்தரத்தால் மனித வாழ்வுக்குத் தேவையான சத்திகளைத்தான் பெற முடியுமே தவிர, மிகப் பெரிய அருளுலகச் சத்திகளைப் பெற முடியாது! முடியாது!! முடியாது!!! முடியவே முடியாது.

ஆனால் வடஆரிய வேத நெறியினர் இன்றைக்கு கண்மூடித்தனமாக, குருட்டுத்தனமாக, மடத்தனமாக அனைவரையும் தவறான வழியில் வழி நடத்துகின்ற முறையில், காயந்திரி மந்தரத்தைச் சொன்னால் அனைத்துச் சத்திகளையும், சித்திகளையும், முத்திகளையும் பெறலாம் என்று கூறி வருகின்றனர். இதனை நம்பி கெட்டுப் போனவர்களும், நலிந்து போனவர்களும் இந்துமதத்தை மறுப்பவர்களாகவும், எதிர்ப்பவர்களாகவும் ஆகி விடுகின்றார்கள். எனவே இந்துமதத்தைக் காப்பாற்றுவதற்காக இ.ம.இ. காயந்திரி மந்தரத்தைப் பற்றிய தவறான செய்திகளைக் கண்டிக்கின்றது. இனியாவது வடஆரிய வேத நெறியினர் திருந்தட்டும். இல்லையேல் வடஆரியர்களை இந்து மத விரோதிகளாகவும், துரோகிகளாகவும் கருதி எதிர்த்துப் போரிட நேரிடும்.

4. காயந்திரி மந்தரம் பெரியவர், சிறியவர், ஆண், பெண் என்ற வேறுபாடின்றி அனைவருமே ஓதலாம் என்பதே பதினெண்சித்தர்கள் வகுத்த நெறி. இதன்படி யாராக இருந்தாலும்

தொடர்ந்து பதினெட்டாண்டுகள் காயந்திரி மந்தரத்தை அன்றாடம் ஆறு காலம் ஓதி வருவார்களேயானால் அவரவர் வாழ்வுக்குத் தேவையான சத்திகளைப் போதுமான அளவு பெற்றுக் கொள்வார்கள் என்பதுதான் உண்மை! உண்மை!! உண்மை!!!

**குறிப்பு**:- இதை விடுத்து வடஆரிய வேத நெறியினர் காயந்திரி மந்தரத்தால் சத்திகளும், சித்திகளும் கிடைத்து விட்டதாகப் பொய் கூறி பிறருக்கு அருள் வழங்க முற்படுகின்றார்கள். இது வருந்தத் தக்கது, கண்டிக்கத் தக்கது. ஏனெனில், பதினெண்சித்தர்கள் மிகத் தெளிவாக காயந்திரி மந்தரத்தால் கிடைக்கும் அருட்சத்தியால் பிறருக்கு அருள் வழங்கவோ, மந்திரிக்கவோ முடியாது என்று கூறுகின்றார்கள். வடஆரிய வேதநெறியினர் இதைச் செய்வதால் இந்தத் தவறுகளை இ.ம.இ. கண்டிக்கின்றது.

5. இவ்வாறு பதினெட்டாண்டுகள் காயந்திரி மந்தரம் ஓதிய பின்தான் காயந்திரி மந்தரத்தின் பிற பகுதிகளான காயந்திரி மாந்தரம், காயந்திரி மாந்தரீகம், காயந்திரி மந்திரம், காயந்திரி மந்திறம் எனும் நான்கையும் குரு வழியாக முறையாக அவரவர் பக்குவத்துக்கும் தேவைக்கும் ஏற்பக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் காயந்திரி மந்தரத்தையே தவறாகப் பொருள் படுத்தி வரும் வடஆரிய வேதநெறியினர் இந்த மற்ற நான்கைப் பற்றிக் குறிக்கவோ, குறிப்பிடவோ, அறிந்து கொள்ளவோ முயலவே வில்லை. இத்தகைய செயல்களினால் வளம் நிறைந்த இந்து மதம் பெரும் நலிவுக்கும், மெலிவுக்கும் உள்ளாகி வருகின்றது. இத்தகைய நிலையை உருவாக்கும் வடஆரிய வேதநெறியினரை இ.ம.இ. கண்டிக்கிறது.

6. பதினெண்சித்தர்கள் படைத்த காயந்திரி மந்தரத்தை பதினெட்டாண்டுகள் ஓதியவர்கள் அகம்பாவம், ஆணவம், பேராசை, சொந்தபந்தப் பாசம் ... முதலியவைகளை யெல்லாம் வென்று இல்லறத் துறவியாக '<u>அந்தணர்</u>' ஆகிடுகின்றனர். இவர்கள் தொடர்ந்து

குருக்களாக, ஆச்சாரியாராக, ஆதீனமாக, சன்னிதானமாக .......... செயல்படலாம். இவர்கள் தொடர்ந்து ஆண்பெண் இன்பம் துய்க்கலாம் என்று தெளிவாகக் குறிக்கின்றனர். ஆனால் இவற்றை யெல்லாம் மறுத்தும் மறந்துமே வடஆரிய வேதநெறியினர் செயல்பட்டு வருவதால் இந்துமதம் செயலிழந்து பலரின் முயற்சிகளுக்கு விடை தராமல் பலத்த கேலிக்கும், கிண்டலுக்கும், ஐயங்களுக்கும், தோல்விகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் இடமளிக்கின்றது. இப்போக்கை வளர்த்து வரும் வடஆரிய வேத நெறியினரை இ.ம.இ. கண்டிக்கின்றது.

7. பதினெண்சித்தர்கள் படைத்த “காயந்திரி மந்தரம்” அனைவரும் ஓதலாம் என்று கூறி பயன்படுத்தி வந்தனர். ஆனால் இதனைத் தங்கள் மொழியில் (சமசுக்கிருதத்தில்) மொழி பெயர்த்துப் பயன்படுத்தி வரும் வடஆரிய வேதநெறியாளர்கள் தவறாகப் பொருள் படுத்தி வருவதோடு “பெண்கள் காயந்திரி மந்தரம் ஓதக் கூடாது” என்று தடை விதித்துள்ளனர். ஆண், பெண் இருவரும் சமமே! பெண்ணே சத்தி! பெண்ணே தெய்வம்! ... என்றெல்லாம் படைத்து வழிபட்டு வரும் இந்து மதத்தினரை கேவலப் படுத்தும் முறையிலும், பெண்களை அடிமைப் படுத்துகின்ற முறையிலும் இக்கூற்றை கூறி வருகின்றனர்.

ஆனால் பதினெண்சித்தர்களோ முற்போக்கு வாதிகள்! மறுமலர்ச்சிச் சிந்தனையாளர்கள்! பகுத்தறிவுவாதிகள்! விஞ்ஞானிகள்! புதுமை விரும்பிகள்! ஆராய்ச்சியாளர்கள்! ‘பெண்ணே சத்தி’ என்ற இக்கொள்கைதான் பதினெண்சித்தர்களின் “சத்தி பூசை”களான ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீகப் பூசைகளுக்கு அடிப்படை. ஆனால் இவை உலகியலோடு ஒத்து வரவில்லை. எனவேதான், “எந்தப் பெண் காயந்திரி மந்தரத்தை ஓதி, எந்தத் தெய்வத்தை மனதில் நினைத்து வழிபட்டு வருகின்றாளோ; அந்தத் தெய்வமாகவே மாறிவிடுகின்றாள்” என்று மிகத் தெளிவாகவே பதினெண்சித்தர்கள் குறிக்கின்றனர். இக்கருத்தைப் பின்பற்றாத மடமைவாதிகளாக, பிற்போக்காளர்களாக

விளங்கி வரும் வடஆரிய வேதநெறியினரை இ.ம.இ. கடுமையாக கண்டிக்கின்றது.

8. எனவே, காயந்திரி மந்தரத்தை இனிமேலாவது அனைவரும் அறிந்து, பயின்று, பயன்படுத்தி, அநுபவித்துப் புரிந்து, நன்மையடையும்படிச் செய்ய வேண்டும். அதுதான் இந்துமதத்தை மறுமலர்ச்சி பெறச் செய்யும். தனி மனிதர்களைப் பக்குவப் படுத்திக் குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு ..... முதலிய அனைத்தையும் வளப்படுத்தி, வலிமைப் படுத்தி, பொலிவு பெறச் செய்யும் ஆற்றல் 'காயந்திரி மந்தரத்துக்கே' உண்டு.

9. இவ்வாறு மிகத் தெளிவாகப் பதினெண்சித்தர்கள் 'காயந்திரி மந்தரத்தைப்' பற்றிக் கூறியிருக்கின்றனர். இதைப் பல மாதங்களுக்கு முன்பே இவ்வறிக்கையின் மூலம் வெளியிட்டுப் பலருக்கும், பல முன்னணி செய்தியேடுகளுக்கும் அனுப்பியிருந்த போதிலும்; வடஆரிய வேதநெறியினர் சமீபகாலமாகப் பல செய்தியேடுகளில் காயந்திரி மந்தரத்துக்குத் தவறான விளக்கமும், பூசைமுறைகளும் வெளியிட்டு வருகின்றனர். இதற்கெல்லாம் முடிசூடும் வண்ணமாக ***'காயத்திரி'*** என்ற பெண் தெய்வம் ஒன்று உள்ளதென்றும்; அதற்கு கோயில் கட்டப்பட்டதாகவும்; தொடர்ந்து பல மணி நேரம் யாகம் நடத்தி அந்த யாகத்தில் காயந்திரி மந்தரம் கூறியதாகவும் செய்திகள் வெளிவந்துள்ளன.

இதனைப் பார்க்கும்போது வடஆரிய வேத நெறியினர் எவ்வளவு தூரம் தவறான பாதைக்கு மக்களை அழைத்துச் செல்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

பதினெண்சித்தர்கள் காயந்திரி மந்தரத்தை தனி மனித நலனுக்காகப் படைத்தனரே அன்றி அதற்காக உருவ வழிபாட்டையோ, வழிபடு நிலையினரையோ, வழிபாட்டிடத்தையோ, குறிப்பிட்ட கடவுளையோ, குறிப்பிட்ட வழிபடு நிலையத்தையோ, பலரும் சேர்ந்து செய்யும்

யாக முறைகளையோ உருவாக்கவே இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவே இல்லை. காயந்திரி மந்தரத்துக்கென்று யாகம் செய்வது என்பது பெரிய ஏமாற்று வேலையே! இருந்தும் வடஆரியர்கள் கற்பனையான போக்கில், மிதமிஞ்சிய அறிவற்ற போக்கில் தனி மனித மந்தரங்களை யாகத்தில் பயன்படுத்தி வருகின்றனர். இது மிகவும் விந்தைக்கும், வியப்புக்கும், வேதனைக்கும், ஏமாற்றத்துக்கும் உரியனவாக உள்ளதோடு, அவர்களின் அருளுலக அறியாமையையும், பூசை நெறிகளில் அரைகுறை வேக்காட்டுத் தன்மையையும் வெட்ட வெளிச்சமாக்குகின்றது.

இப்படிப்பட்ட குருட்டுத்தனத்தால்தான் இந்துமதம் கேலிக்கும், கிண்டலுக்கும், மறுப்புக்கும், வெறுப்புக்கும், ஏளனத்துக்கும், நகைச்சுவைக்கும்....... உள்ளாகி நலிந்தும், மெலிந்தும் வருகின்றது. எனவே இ.ம.இ. நேரடியாக இப் போக்கினை வளர்த்து வரும் வடஆரிய வேத நெறியினரை இக்கட்டுரையின் வாயிலாக கடுமையாக கண்டிக்கின்றது. திருந்துவதற்கும், திருத்துவதற்கும் வாய்ப்பினை நல்குகின்றது.

---

**//உண்மை நகல்//**

**<u>மூலம்</u>**:- குருதேவர் அறிக்கைகள் 8, 9, 10, 11 ஆகியவற்றில் தொடர்ச்சியாக வெளி வந்த கட்டுரை. 1984 ஆகசுட்டு முதல் நவம்பர் வரை 4 மாத இதழ்களில் அச்சாகியது.

# அருளுலக இருளகற்றும் அறிவிக்கை

1) **‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’ -** ***திருமூலர் மந்திரம்***

மேற்கண்ட சித்தர் பாடல் சித்தர் நெறிக்கே குழப்பத்தை விளைவிப்பதாகப் பலராலும் தவறாகக் கருதப்படுகின்றது. இதுபற்றிய விளக்கம் அருளுலக இருளகற்றும் அறிவிக்கையில் முதலிடம் பெறுகிறது.

2) திருமூலரின் வரலாறு பற்றி 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் குருபாரம்பரியத்தில் தெளிவில்லாத, நேரடியாகக் குறிப்பிடாத குறிப்புக்களே இருக்கின்றன. ஆனால், 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார் அவர்களின் குருபாரம்பரியத்திலும், இலக்கிய பாரம்பரியத்திலும், குருவாசகத்திலும் மிகத் தெளிவாக ‘நவநாத சித்தர் திருமூலர்’ என்று பெயரிட்டே இவருடைய வரலாறு, வாழ்க்கை, வாழ்க்கைச் சாதனைகள், ஏட்டில் எழுதியவை, நாட்டில் சொல்லியவை ... முதலியவற்றின் முழு விவரங்களும் குறிக்கப் பட்டிருக்கின்றன. இவை பற்றிய பிற எமது ‘திருமூலர் வரலாறு’ என்ற நூலில் காணலாம்.

**<u>குறிப்பு</u>:-** இந்த ‘திருமூலர் வரலாறு’ என்ற நூலை வெளியிட்டு உதவுமாறு அரசு, திருவாவடுதுறை ஆதீனம் முதலான பல ஆதீனங்கள், தமிழகத்து இந்துமதப் பெரியவர்கள், சமுதாய அரசியல் தலைவர்கள், ..... முதலியவர்களிடம் இருபது ஆண்டுக் காலத்திற்கு மேலாக உதவி கேட்டும் இதுவரை கிடைக்கவில்லை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு உதவினால், நூல் [...] வெளியிடப்படும். அது

தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ் நாடு எனும் மூன்றையும் விழிச்சிக்கும், எழுச்சிக்கும், செழுச்சிக்கும் உரியதாக்கும். புரிந்தவர் உதவலாம்.

3) திருமூலர் **<u>நவநாத சித்தர் வகையைச் சேர்ந்தவர்</u>** என்பதால் இவருடைய அனுபவமும், அறிவும், கருத்தும் பதினெண்சித்தர்கள் படைத்த இந்துமதக் கருத்தாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதாவது, பதினெண்சித்தர்கள் தோற்றுவித்த 48வகைச் சித்தர்களில் ஞானசித்தர்கள் என்பவர்கள் இந்துமதத்திற்கே உரிய இல்லற வாழ்க்கையை (பெண்ணின்பத்தை) இழித்தும், பழித்தும், மறுத்தும், வெறுத்தும் கூறுபவர்களாகவும்; பூசாவிதியின் உயிர்நாடியான இறைச்சியுணவுப் படையலை, கள்ளை, குமரி கன்னி வாலை எனும் அருட்பெண்டிரை, ஏந்தரீக தாந்தரீக மாந்தரீகப் பூசைக்கு ஏழு பருவத்துப் பெண்களையும் வெறுத்து ஒதுக்குபவர்களாகவுமே இருக்கிறார்கள் என்றே குறிப்பிட்டு <u>மன்னித்திடுகின்றார்கள்</u>.

எனவே, இந்த ஞானசித்தர்களின் கருத்துக்கள், இந்துமதத்தின் கருத்துக்களாக ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதவையே. இதுபோலவே, நவநாத சித்தர்களுள் ஒருவரான திருமூலரின் கருத்துக்களும், திருவள்ளுவரின் கருத்துக்களும், அறநூல் நீதிநூல் பாடியவர்களின் கருத்துக்களும் அப்படியே முழுமையாக இந்துமதத்தின் கருத்துக்கள் என்று ஏற்றுக் கொள்ளப்பட முடியாதவை, முடியாதவை, முடியாதவை. இதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஏனெனில், திருவள்ளுவர், திருமூலர் போன்றவர்கள் பதினெண்சித்தர்களின் இந்துமதக் கருத்துக்களை அப்படியே ஏற்று விளக்கியுரைத்துப் பரப்புவதற்காக வந்தவர்கள் அல்ல. இவர்கள் பதினெண்சித்தர்களின் விந்துவழி வாரிசுகளோ, குருவழி வாரிசுகளோ அல்ல. இவர்கள் இம் மண்ணுலகில் மூன்று பெரும் யுகங்களில் செய்திட்ட நல்வினைகளுக்கும், அல்வினைகளுக்கும் ஏற்பவே பதினெண்சித்தர்கள் வகுத்திட்ட 48 வகைச் சித்தர்களில் நவநாத

சித்தர்கள் என்ற வகையைச் சேர்ந்தவர்களாகப் பிறந்தார்கள். (சில வால்மீகிகள், சில வியாசர்கள், சில கம்பர்கள், சில பெருந்தேவனார்கள், ..... இந்த நவநாத சித்தர் வகையைச் சேர்ந்தவர்களே.) இந்த நவநாத சித்தர்கள் தங்களுடைய ஏட்டறிவுக்கும், பட்டறிவுக்கும் ஏற்பவே நூல்கள் எழுதியிருக்கிறார்கள். எனவே, இவர்களின் கருத்துக்கள் இவர்களின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப அமைந்தவையே. அவை எக்காரணம் கொண்டும் இந்துமதத்தின் கருத்துக்களாக ஏற்றுக் கொள்ள முடியாதவையே, முடியாதவையே, முடியாதவையே.

4) பதினெண்சித்தர்கள் விண்வெளியைச் சேர்ந்த கடவுளர் வகை (48) நாற்பத்தெட்டு, இம்மண்ணுலகில் அமைத்திட்ட வழிபாட்டு நிலையங்களின் வகை 48, வழிபடுநிலை பெற்றோர்களின் வகை 48, அருளாளர்களின் வகை 48, அருட்பட்டம் பெற்றவர்களின் வகை 48, அருட்கலைகளின் வகை 48 என்று அனைத்தையும் 48 வகைகளாகப் பிரித்திருக்கும் பொழுது, 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்பது தவறான கருத்தாகும், பிழையான கருத்தாகும்.

5) நவநாத சித்தரான திருமூலர் அவருடைய காலத்தில் குலங்களின் பெயரால் சண்டையும் வழிபடு தேவன்களின் (கடவுள்களின்) பெயரால் சண்டையும் அதிகமாக இருந்திட்ட காரணத்தினால்; அனைத்துக்கும் இடையிலிருந்த வேற்றுமைகளையும், போராட்டங்களையும் அகற்றி ஒற்றுமை உருவாக்குவதற்காக, சமுதாயத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக, தனிமனித வாழ்வில் நிம்மதியையும், நிறைவையும் உருவாக்குவதற்காக ... மேற்பட்ட 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' என்ற கருத்தை தனது சொந்தக் கருத்தாக எழுதியிருக்கின்றார் என்று கூறுவதே சிறப்புடையது.

இதேபோல், திருவள்ளுவர் தமது திருக்குறளில் கள்ளுண்பதையும், இறைச்சியுண்பதையும் கண்டித்துள்ள கருத்துக்களையும், துறவறத்தை ஆதரித்துள்ள கருத்துக்களையும் ... இவை போன்ற பதினெண்

சித்தர்களின் இந்துமதத்திற்கு எதிர்ப்பாகக் கூறியுள்ள கருத்துக்களேயும் அவருடைய சொந்தக் கருத்தாகவே கருதிடல் வேண்டும்.

6) பதினெண்சித்தர்கள் ‘குலம்’ என்று குறிப்பது எதனை என்பதும், ‘தேவன்’ என்று குறிப்பது எதனை என்பதும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாக்குகளிலும், வாசகங்களிலும்தான் கண்டறிய முடியும். அப்படியல்லாமல், பதினெண்சித்தர் இனத்தைச் சேராத வேறு வகைச் சித்தர்கள் கூறுகின்ற எந்தக் கருத்தையும் இந்துமதத்தின் கருத்தாக ஏற்றுக் கொள்ளக் கூடாது! கூடாது! கூடாது!

**<u>சிறப்புக் குறிப்பு</u>**:- பதினெண்சித்தர்களால் உருவாக்கப்பட்ட சித்தர்களின் வகையைச் சேர்ந்தவர்கள் கூறிய கருத்தே இந்த அளவு பதினெண்சித்தர்களின் இந்துமதத்தைக் குழப்புகிறது என்ருல், இந்துமதத்திற்கும், இந்தியாவிற்கும் அன்னியர்களான வடஆரியர்களின் வேதநெறிக் கருத்துக்களும், சமசுக்கிருத மொழியும் இந்துமதத்தை மிகமிகப் பெரிய அளவில் குழப்பியும், கலக்கியும், திரித்தும், தேக்கியும், முடக்கியும், தாக்கியும் நலிவடையச் செய்தும், அழிவடையச் செய்தும் இந்துக்களேத் துன்புறுத்துவது ஆச்சரியப் படுவதற்கில்லே.

அதனுல், வடஆரியர்களேயும், அவர்களின் வேதநெறி முறையினேயும், சமசுக்கிருத மொழியினேயும் மிகமிகக் கடுமையாக எதிர்த்தே ஆக வேண்டும். வடஆரியர்களால்தான் இந்துமதம் செயலிழந்து, செல்வாக்கிழந்து, சிதைந்து, சீரழிந்து மக்களுக்கு உதவ முடியாமல் போய்விட்டது. எனவே, இந்துக்கள் அனேவரும் ஆரிய மாயைகளே, சூழ்ச்சிகளே, சுரண்டல்களே, ஏமாற்றுக்களே, ஆபாசக் கற்பனேகளே, அண்டப்புளுகுகளே, பயனற்ற பழக்க வழக்கங்களே, மூடநம்பிக்கைகளே, சதிகாரச் சாத்திறச் சம்பிறதாயங்களே, பொய்யான வேத உபநிடதங்களே, தவருன கொள்கைகளே, சர்வாதிகாரப் போக்குகளே, முதலாளித்துவ நோக்குகளே முழுமையாகப் புரிந்து நல்ல அறிவு நுட்பதிட்பத்தோடும், பதினெண்சித்தர்களின் கருத்துக்களின் துணேயோடும், சித்தர்நெறிச் சான்றுகளோடும்,

ஊன்றுகளோடும் தொடர்ந்து போரிட்டு முறியடித்திடல் வேண்டும்! வேண்டும்! வேண்டும்!

இந்துமதத்தின் மூலங்கள் அனைத்தும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. இவையனைத்தும் அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் இம்மண்ணுலகிற்கு வந்த காலத்தில், (1976இல்) இன்றைக்குச் சுமார் 43,73,075 (நாற்பத்துமூன்று இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து எழுபத்தைந்து) ஆண்டுகளுக்கு முன்னால் வழங்கப்பட்டவையே, வழங்கப்பட்டவையே, வழங்கப்பட்டவையே. இப்பேருண்மையினை இந்துமதத்தின் மூலவர்களாக, காவலர்களாக, கருவறை நாயகர்களாக, கருவூலங்களாக, உயிராக இருக்கின்ற தமிழர்கள் உணர வேண்டும், உணர வேண்டும், உணர வேண்டும். அப்படி உணர்ந்ததற்கு ஏற்பச் செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும், செயல்பட வேண்டும்.

7) திருமூலரின் படைப்புக்கள் அனைத்தும் பதினெண்சித்தர்களின் அருளுலகக் கருத்துக்களின் சாரத்தை, அவருடைய சொந்த விருப்பு வெறுப்பு பயிற்சி தேர்ச்சி முதிர்ச்சி முதலியவற்றிற்கேற்ப வெளியிடப்பட்டவையே ஆகும் என்ற மிகத் தெளிவான கருத்துடன்தான் அனைவரும் திருமூலரின் படைப்புக்களைப் பயன்படுத்த வேண்டும் என்ற குருவாணையை இராசிவட்ட நிறைவுடையார், இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், சித்தர் கருவூறார் அவர்கள் வழங்குகிறார்கள்.

---

**//உண்மை நகல்//**

//**<u>இதன் மூலநகல்</u>**: வேம்படிதாளம் சித்தரடியான் திரு இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது//

# சிவராத்திரி பற்றி இந்துவேதம் கூறும் முதன்மையான கருத்து

"ஆகாய கன்னி கங்கை ஏற்ற இரவாம்
மாக்கடல் கடைந்த நஞ்சுண்ட மரண இரவாம்
ஏகாயம் எண்ணற்ற கோடி தோற்றுவித்த இரவாம்
கூகா என பிறர்கூடி அழா வண்ணம்
சாகா வரங்கள் வழங்கும் வகைதரு சிவராத்திரி
வாகாகக் கொண்டாடி தோதாகப் பிறவித்துயர் போக்கிடலாம்."

***(இருக்குவேதம் 3 : 7 : 23)***

## மகா சிவராத்திரி பற்றிய இந்துவேதச் செய்திகள்

1) கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்திலே மூலப் பதினெண் சித்தர்கள் குழு இம்மண்ணுலகில் வந்து இறங்கிய இரவு.

2) இம் மண்ணுலகில் பயிரினம், உயிரினம் தோன்ற ஆரம்பித்திட்ட இரவு.

3) பயிரின, உயிரினங்களுக்கும், இம்மண்ணுலகிற்கும் தலைவராக மனிசர் தோன்ற ஆரம்பித்திட்ட இரவு.

4) அண்ட பேரண்டங்களிலிருந்து அடிக்கடி வந்திட்ட பதினெண் சித்தர் குழு ஆண்டுக்கு ஒருமுறை ஓரிடத்தில் ஒன்றுகூடி, இவ்வையக முன்னேற்றத்திற்காக, இம்மண்ணுலக முன்னேற்றத்திற்காக, இம்மாஞாலத்தின் முன்னேற்றத்திற்காக கருத்துப் பரிமாற்றக் கலந்துரையாடல் சிந்தனை அரங்கம் நிகழ்த்திடும் இரவு.

5) ஆதிசிவனாரின் மகன் முருகன் சேவலோன் கலைகளைப் பயில ஆரம்பித்த இரவு.

6) ஆதிசிவனாரின் மகன் முருகன் தனது 32வது வயதில் அருளுலகத்தவரும், பொருளுலகத்தவரும், பெரும் கவலைக்குள்ளாகிடும் வண்ணம் தன்னை 18 படைவீடுகளில் **'உருவ அருவ சமாதி'யாக** நிலைபேறு பெறச் செய்ய முடிவெடுத்த இரவு.

7) ஆதிசிவனார் தமது திருமகன் முருகனின் பரிந்துரைப்படி விண்ணுலக ஐவர் குழுவையும், மண்ணுலக ஐவர் குழுவையும் ஒன்றுகூட்டி இருக்கு வேதத்திலுள்ள வாக்கு, வாக்கியம், வாசகம் என்ற மூன்றையும்; அசுரவேதம், அதர்வான வேதம், யாமவேதம் என்ற மூன்று தனித்தனி வேதங்களாகப் பிரித்திட ஆரம்பித்திட்ட இரவு.

8) ஆதிசிவனார் கடலுள் மறைந்திட்ட இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டத்தில் இருந்திட்ட தென் இமயமலையின் அடிவாரத்தில் தென்இந்து, தென்யமுனை, தென்கங்கை என்ற மூன்று ஆறுகளும் கூடிய முக்கூடல் பகுதியில் பதினெண்சித்தர் மடத்திற்காக **'மோகம்சிதரு'** நகரைத் தோற்றுவித்து முத்தமிழ்ச் சங்கத்தை நிறுவ ஆரம்பித்த இரவு.

9) ஆதிசிவனார் முத்தமிழ் சங்கத்திற்காக 'மோகம்சிதரு நகரையும்' அருகிலிருந்த மருத மரக்காட்டில் 'மருதமரக் காட்டு நகர்' என்ற பொருளில் **மருதை மாநகர்** என்ற மாநகரத்தை தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு.

10) ஆதிசிவனார் இந்து வேதத்திற்காகவும், இந்துமதத்திற்காகவும் பதினெண்சித்தர் மடத்தையும், பீடத்தையும் நிறுவுவதற்காக 'மோகம்சிதரு' நகரிலிருந்து சில கல் தொலைவில் 'அருட்பா நகர்' என்ற நகரைத் தோற்றுவிக்க ஆரம்பித்த இரவு.

11) ஆதிசிவனார் உருவாக்கிய பதினெண்சித்தர் மடத்தில் இந்துவேத நூல்களையும், பதினெண்சித்தர் பீடத்தில் இந்து மத நூல்களையும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழியான முத்தமிழ் மூலம் கற்றுத் தேர்ந்து 'மணீசர்' என்ற நிலையிலிருந்து பக்குவப்பட்ட மனதையுடைய மனிதர்களாக மாறிட்டவர்களுக்கு முதன்முதல் அருட்பட்டங்கள் வழங்கிட்ட இரவு.

12) ஆதிசிவனுர் விலங்குகளோடு விலங்குகளாக திரிந்திட்ட மனீசர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கைக்குரியவர்களே அழைத்து முத்தமிழ்ச் சங்கத்தில் சேர்ந்து கல்வி கற்பித்திட ஆரம்பித்திட்ட இரவு.

13) இருக்குவேதம் முறையாக அசுரவேதம், அதர்வான வேதம், யாமவேதம் என்று மேலும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, இந்த மண்ணுலகில் மட்டுமே நான்கு வேதமாக வடிவப்பட்டு 1359 அண்டங்களுக்கும் அறிவிக்கப் பட்ட இரவு.

14) இந்த ஞாலம் எரிகின்ற நெருப்புக் கோளமாக இருந்து எரிதல் அடங்கி கங்காக, நெருப்புக்கனலாக மாறியதும்; நெருப்புக்கனல் பனிக்கட்டியாக மாறியதும்; பனிக்கட்டி நீராக மாறியதும்; நீர் நிலமாக மாறியதும்; நிலத்தில் உயிரணுக்கள் தோன்ற ஆரம்பித்ததும் இந்த சிவராத்திரி எனப்படுகின்ற மாசி மாதம் தேய்பிறையில் பதிஞன்காம் இரவு, பதிஞன்கு நாழிகைக்குரிய இலிங்க வடிவ கால இரவே மகாசிவராத்திரி என்று குறிப்பிடுகிருர்கள். அதாவது, ஆவி, ஆருயிர், ஆன்மா என்ற மூன்றும் ஒருங்கிணேந்து இலிங்க வடிவில் சீவன் உருவான இரவே சீவராத்திரி எனும் சிவராத்திரியாகும். அதாவது, இந்த சீவன்தான் அருவுருவ நிலேயிலிருந்து உருவஅருவ நிலே பெற்று மனீசஞக மாறிற்று. இப்படி மனீசன் தோன்றுவதற்குரிய சீவன் தோன்றிய இரவு சீவ இரவு. அதுவே சீவராத்திரி, சிவராத்திரி என்று அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்கள் குறிக்கின்ருர்கள்.

## <u>சிவராத்திரி அன்று செய்ய வேண்டியது</u>

இந்துக்கள் அனேவரும் மகாசிவராத்திரி அன்று காலேயிலிருந்து மறுநாள் காலே வரை உள்ள 24 மணி நேரத்தில், ஒரு சில மணித்துளிகளாவது <u>தங்கள் ஊரில் உள்ள சுடுகாட்டிற்குச்</u> சென்று நமது இந்துமதக் கடவுளர்களுக்கெல்லாம் கடவுளாக இருக்கின்ற <u>சிவபெருமானே</u> கும்பிட்டு வர வேண்டும்.

அத்துடன் தங்களுடைய மாண்டு போன முன்னோர்களை நினைத்து அவர்களுக்கு விருப்பமான பலகாரங்களையும், உணவு வகைகளையும் சமைத்து எடுத்துக்கொண்டு; தேங்காய், பழம், பூ, ஊதுபத்தி, கற்பூரம், சாம்பிராணி, வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு, சந்தனம், குங்குமம், திருநீறு, மஞ்சள் ..... முதலியவைகளை எல்லாம் எடுத்துச் சென்று சுடுகாட்டில் ஏதேனும் ஓரிடத்தில் தண்ணீர் தெளித்து சாணமிட்டு மெழுகி, மாக்கோலம் போட்டு, நெய் விளக்கு ஏற்றி எல்லாவற்றையும் தலைவாழை இலை போட்டு படைத்து விட்டு; படைத்த உணவில் எல்லாவற்றிலும் சிறிது அங்கே எடுத்து வைத்துவிட்டு மீதியை எடுத்துக் கொண்டு நேராக சிவன் கோயிலுக்குச் செல்ல வேண்டும்.

அங்கு கொடிமரத்தின் முன் அனைத்தையும் வைத்து விட்டு தங்களுக்குத் தெரிந்த சிவன்பாடலை (அ) சீவகாயந்திரியை உரத்த குரலில் ஓதியபடியே ஐந்துமுறை வலம் வர வேண்டும். பின் பலிபீடம், நந்தியையையும் கும்பிட்டு விட்டு நேராக அம்மன் சன்னதிக்கு சென்று வழிபட வேண்டும். பிறகு கருவறையில் உள்ள சிவனை வழிபட வேண்டும். அதன் பிறகு மற்ற தெய்வங்களை வணங்கி விட்டு கோயிலில் உள்ள குரு, குருக்கள், குருமார், பூசாறி, அருட்சகர்..... என்றுள்ள அனைவரின் காலைத் தொட்டு விழுந்து கும்பிட்டு வாழ்த்துப் பெற்று வீடு திரும்ப வேண்டும்.

வீட்டிற்கு வந்தபின் குத்து விளக்கு ஏற்றி, ஊதுபத்தி (அ) சாம்பிராணி புகையிட்டு; சிவபெருமானையும், மாண்டு போன தங்களது குல முதல்வர்களையும் நினைத்து சிறிதுநேரம் பூசையில் அமர்ந்தபின் அந்த படையலை அனைவரும் உண்ணலாம், மற்றவருக்கும் தரலாம்.

ஓம் திருச்சிறம்பலம் ஓம்.

------------------------

**//உண்மை நகல்//**

**__மூலம்__**: ஏப்பிரல் 1994இல் வெளியான இந்து ஆரணம் 7வது அறிக்கையில் அச்சிடப் பட்டுள்ள கட்டுரை.

# இந்து மத வரலாற்றுப் பேருண்மைகள்

**பிறப்பிடம்:** இளமுறியாக் கண்டம் (The lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்'.

**காலம்:** பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி.மு.43,71,101ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது.

**மொழி:** தமிழ் மொழி.

**வழிபாட்டு நிலையம்:** 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

**இந்துமத நூல்கள்:**

| | | |
|---|---|---|
| பூசைமொழி நூல்கள் | - | 108 |
| பூசைவிதி நூல்கள் | - | 48 |
| தத்துவ நூல்கள் | - | 96 |
| செயல்சித்தாந்த நூல்கள் | - | 144 |
| குருபீட நூல்கள் | - | 36 |
| ஆக மொத்தம் | - | 432 நூல்கள். |

**இந்துமதப் பயன்கள்:** தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

**இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.**

**அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வு.**

**அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.**

*ஆதாரம்: மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதிசிவனாரின் குருபாரம்பரியம்.

**சித்தர்கள் எந்தப் பொருளுக்கும் கடவுட் தன்மையைத் தரக் கூடியவர்கள்.**



**தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்** தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் குருவாணைப்படி இந்து வேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை ஞாலகுரு அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

Published under the Divine Grace of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்), Arani, Thiruvallur Dt.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.books.gurudevar.org Email: indhuism@gmail.com